**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 97/2023 P.W. 8/L.W.2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. ஜெகதீஸ்** | **Caste** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 16.05.2023**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**1.** நான் மேற்கண்ட முகவரியில் வசித்து கூலி வேலைச் செய்து வருகிறேன். நீதிமன்றத்தில் 1வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். மேற்படி **கையொப்பம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 31.12.2022 ம் தேதி அதிகாலை 04.45 மணியிலிருந்து 05.00 மணி வரை நானும் எனது நண்பர் அறிவழகனும் வேலைக்குச் செல்வதற்காக குளச்சலில் இருந்து மண்டைக்காட்டிற்கு நடந்து சென்றோம். 05.00 மணி அளவில் வெட்டுமடை இசக்கியம்மன் கோவில் அருகே வரும்போது போலீசார் வாகன தணிக்கை செய்துக்கொண்டிருந்தார்கள்.

2. வாகன சோதனை செய்துக்கொண்டிருந்த இடத்திற்கு சென்றபோது மண்டைக்காட்டிலிருந்து குளச்சல் நோக்கி கறுப்பு கலர் பல்சர் இருசக்கர வாகனத்தில் ஒரு ஆணும் ஒரு பெண்ணும் வந்துக்கொண்டிருந்தார்கள். ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தான் அன்று நான் பார்த்த நபர்கள். அன்றையதினம் மேற்படி இன்று ஆஜராகியுள்ள பெண் குற்றம் சுமத்தப்பட்ட நபர் சுடிதார் அணிந்திருந்தார்.

3. போலீசார் கையை காட்டி வண்டியை நிறுத்திய போது குற்றம் சுமத்தப்பட்ட நபர் வண்டியை திருப்ப முயன்ற போது போலீசார் ஓடி வந்து வண்டியின் சாவியை எடுத்து விட்டு மேற்கொண்டு அவர்களை விசாரித்த போது ஆண் நபர் தன்னுடைய பெயர் ஷாபுமோன் என்றும்

பெண் தன்னுடைய பெயர் நூர்ஜகான் என்றும் குறிப்பிட்டார். மேலும் அவர்களை விசாரித்த போது அவர்கள் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள். அதை என் முன்பாக பதிவுச் செய்தார்கள். அதை என்னிடம் படித்து காண்பித்து அங்கேயே அதில் நான் கையொப்பம் செய்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை : குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர் .**

நான் முதல் விசாரணை சாட்சியத்தில் சொன்ன சங்கதிகளை தவிர்த்து வேறு சங்கதிகள் எதுவும் இல்லை. நான் 12 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு ஆங்கிலம் ஓரளவு தான் படிக்கத் தெரியும். நான் குளச்சல் காவல்நிலையத்திற்கு அடிக்கடி செல்வேன் என்றால் பேன் மாட்ட செல்வேன், ஒயரிங் பண்ண போவேன். நான் டீ வாங்கிக் கொடுப்னேன் என்றால் கொடுக்க மாட்டேன். குளச்சல் காவல்நிலையத்தில் என்னை அடிக்கடி பார்க்கலாம் என்றால் - சரியல்ல. மாதத்தில் ஒருநாள் பார்க்கலாம்.

2. நான் கையொப்பம் போட்டுக் கொடுத்த பேப்பர் எழுதப்பட்ட பேப்பரா அல்லது எழுதபடாத பேப்பரா என்றால் எழுதப்படாத டைப்ரைட்டிங் பேப்பர். அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால்- ஆம் தெரியும், அவர்கள் படித்துக் காண்பித்தார்கள். நானும் படித்துப் பார்த்தேன். ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்ட இடமானது இருட்டான பகுதி என்றால் ஒரு நபரை பார்த்தால் தெரியும் அளவிற்கு உள்ள பகுதி.

3. என்னுடைய வீட்டிலிருந்து குளச்சலுக்கு சுமாராக 1 கி.மீ இருக்கும். குளச்சல் காவல்நிலையத்திலிருந்து என்னுடைய வீடு 2 கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரியல்ல. மேற்படி நான் கையொப்பம் செய்த ஒப்புதல் வாக்குமூலத்தைப் பொறுத்து அதை யார் யார் பெற்றார்கள் என்றால் ஐயாக்கள் பெயர்கள் எல்லாம் எனக்குத் தெரியாது. மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் பதிவுச் செய்யும் போது வீடியோ பதிவுச் செய்தார்களா என்றால் இல்லை. போட்டோ எடுத்தார்களா என்றால் அதுவும் இல்லை.

4. ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுடன் சேர்ந்து என்னையும் காவலர்கள் எங்காவது அழைத்துச் சென்றார்களா என்றால் - சரியல்ல. சம்பவயிடத்தில் போலீசார் கம்பியூட்டர், லேப்டாப், பிரிண்டர் ஆகியவற்றை எல்லாம் அந்த பகுதியில் வைத்து என்னிடம் தட்டச்சு செய்து கையொப்பம் பெற்றார்களா என்றால் - இல்லை. தட்டச்சு செய்து அதனை வெளியே சென்று ஜெராக்ஸ் எடுத்து வந்தார்கள். அதன் பின்பு தான் கையொப்பம் செய்தேன்.

5. நான் மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பம் செய்ததை பொறுத்து அந்தயிடத்தில் நானும் எனது நண்பர் அறிவழகனும் நடந்து வந்ததாக தான் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் - சரிதான். ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுடன்

நானும் சென்று போலீசார் முன்னிலையில் நூர்ஜகான் என்பவரிடமிருந்து 25 பவுன் நகைகள் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்பட்டிருந்தால் அது - தவறு. அவ்வாறு எதுவும் இல்லை. நான் சொல்வது போல் எந்த சங்கதியும் இல்லை என்றாலும் குற்றம் சுமத்தப்பட்டநபர்களை காவல்நிலையத்தில் வைத்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்று அங்கு தான் நான் கையொப்பம் செய்தேன் என்றால் - சரியல்ல.

6. போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க மேற்படி காவல் அதிகாரிகளுக்கு உதவி செய்பவன் என்ற முறையில் பொய்யாக புனையப்பட்ட வழக்கில் உண்மைக்கு மாறான சங்கதிகளை கூறி நான் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் எந்த நேரத்திலும் மேற்படி குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை பார்க்கவில்லை என்றாலும், அவர்களை பார்த்ததாக உண்மையை மறைத்து வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.